நாட்டில் தற்போதைய

# அணுமின் உற்பத்தி எத்தனை மெகாவாட் - விவரம் தருக!

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச்.15-

நாட்டின் அணு மின் உற்பத்தியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளதா? மொத்த அணுமின் உற்பத்தியில் 40 சதவிகிதம் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறதா? மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நமது நாட்டில் தற்போதைய அணுமின் உற்பத்தி சுமார் 8,000 மெகாவாட் என்பது உண்மையா? அதில் 40% தமிழ்நாட்டின் கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் ஆகிய இரு மின் நிலையங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் நாட்டின் பிற அணுமின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் அணுசக்தி விவரம் தருக?

13800 மெகாவாட் அணுமின்சாரம் உற்பத்தி செய்யும் ஒட்டுமொத்த திறன் கொண்ட 18 அணுமின் உலைகளை உருவாக்க அரசாங்கம் முன்மொழிகிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் அணுமின் நிலையங்கள் இயக்கப்படவுள்ள இடங்களின் பட்டியல் மற்றும் ஒவ்வொரு மின் நிலையமும் நிறைவடையும் நேரம்; மற்றும் இந்த அணுமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதியுடன் செலவிடப்படக் கூடிய மொத்த நிதி எவ்வளவு? கதிர் ஆனந்த் எம்.பி. என கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் பதில் : ஒன்றிய அரசின் மாநில பணியாளர் பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்களுக்கான அமைச்சர் மற்றும் பிரதமர் அலுவலகம் & அணுசக்தி துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம். தமிழ்நாட்டில் உள்ள அணு மின் நிலையங்களின் நிறுவப்பட்ட திறன் கல்பாக்கத்தில் உள்ள MAPS1&2 (2X220 MW) மற்றும் கூடங்குளத்தில் உள்ள KKNPP1&2 (2X1000 MW) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

மொத்தத்தில், நிறுவப்பட்ட அணு மின் திறன் 2440 MW ஆகும் இது நாட்டின் மொத்த நிறுவப்பட்ட திறனில் (8180 MW) சுமார் 30% ஆகும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

இந்திய அரசின் அடல் ஆய்வுச் சாலை திட்டம்,

# கிராமப்புற மக்களிடையே செயல்படுத்தும் எண்ணம் ஒன்றிய அரசிடம் உள்ளதா?

## மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச்-15

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 12 மார்ச் 2025 அன்று மக்களவையில், இந்திய அரசால், நகர்ப்புறங்களில் நிறைவேற்றப்படும் அடல் ஆய்வுச் சாலை திட்டம் கிரமாப்புற மக்களுக்கும் விரிவுபடுத்த ஏதேனும் திட்டங்கள் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத்துறை இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அடல் ஆய்வுச்சாலைகள் 5945 அரசு பள்ளிகளிலும், 4055 தனியார் பள்ளிகளிலும் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன என்றும், ஆனால் அதற்கான பயிற்சியாளர்கள் குறித்த ஆய்வுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், மொத்த பள்ளிகளில், 60 சதவீதத்திற்கும் மேலான பள்ளிகள் கிராமப்புற பகுதிகளில் செயல்படுகின்றன என்றும், முன்னேற்றத்தை நோக்கி நகரும் மாவட்டங்களில் 1022 பள்ளிகளில் அடல் ஆய்வுச்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், இதற்கான வருடாந்தி ஆய்வுத் திட்டங்கள், நாட்காட்டிகள், வழிகாட்டு கையேடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத்துறை இணையமைச்சர் மாண்புமிகு திரு. ராவ் இந்தர்ஜித் சிங் அவர்கள் மக்களவையில் திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

முதல்வர் பிறந்த நாள் விழா: கலைச்செல்வன் தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. – இரா.செந்தில் குமார் – வே.சிவக்குமார் பங்கேற்பு!

# இராயபுரம் 49வது வட்டத்தில் நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மார்ச் 15-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்குப் பகுதி 49-வது வட்ட தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (15.3.2025 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, பாலு முதலி தெருவில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் தலைமை வகிக்கிறார். ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் இரா.செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் வே.சிவக்குமார், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், ஜெ.புருஷோத்தமன், காட்டன் ஜி.சதீஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி. கண்ணன், சு.சேகர், ஏ.வேணுகோபால், என். ஏழுமலை, சி.லிங்கேசன், கே.என். பார்த்திபன், வழக்கறிஞர் எம்.டி.மதன்ராஜ், எல். கிருஷ்ணஹரிஹரன், எஸ்.சந்திரபொம்மு, ஒளிஒலி பாபு, ஜெ.விகாஷ், ரெடிமேட் செந்தில்குமார், எஸ்.ராதாகிருஷ்ணன், வி.கலைச்செல்வன், ஆவின் இளங்கோ, ஏழுமலை, எஸ். ஈஸ்வரன், எஸ்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட முன்னாள் செயலாளர் எல்.சீனிவாசன், எம். பழனி, ஏ.குமார், ஜி.வனிதா, ஜி.கோதண்டன், த.க. பன்னீர்செல்வம், ப.சுதாகர், இ.கதிரவன், கே.பாஸ்கர், ஜி.விநாயகமூர்த்தி, எஸ்.சங்கர், கே.பாலகிருஷ்ணன், எம். தங்கராஜ், ஆர்.எம். ராமமூர்த்தி, ஜி.ராமகிருஷ்ணன், கே. கன்னியப்பன், வி.சின்னசாமி, பி.நிதீஷ்குமார், எஸ். முத்துக்குமார், தினேஷ்குமார், ஏ.பாஸ்கர், இ.கே.விக்ரம், கே.ராஜேஷ், பாஸ்கர், ஜி.ரேவதி, இ. குமார், சி.ஏ. மகேஷ்குமார், த.பாலாஜி, இ.மாரி, எல். பகிரதன், பி.டி.சி. எஸ்.சகாயராஜ், கே.ரவி, பி.மோகனசுந்தரம், ஆர். மோகன்ராஜ், சி.ஜெயபால், ஏ.கார்த்திக் ஆகியோர் வரவேற்புப் பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இதில் தா.இளையஅருணா, ந.மனோகரன், டாக்டர் ஆ.சுபேர்கான், பி.டி.பாண்டிச்செல்வம், எஸ். மருதுகணேஷ், வண்ணை எஸ்.புகாரி, இரா.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், கி.ராஜேந்திரன், நா. சண்முகம், பா.வேளாங்கன்னி, கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே. மதன், வி.வி.ரமேஷ், எம்.தீன தயாளன், டி.சுரேஷ், கார்த்திக்செங்குட்டுவன், லட்சுமி வேலு, பி.செந்தில்குமார், வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, ஏ.ரமேஷ்பாபு, த.தமிழ்க்கொடி, பொன்லட்சுமி, ரெயின்போ என்.விஜயகுமார், நா.கஜேந்திரன், எம். என்.வெங்கட், எஸ்.சுரேஷ், கே. லட்சுமணன், பி.முனுசாமி, வி.குமார், ஐ.சி.எப். பழனி, என்.பாரி, சி.மனோகரன், வண்ணை இ.மூர்த்தி, க. சேகரன், எம்.இ.சாகுல்அமீது, அறிவகம் எஸ்.ஏ.ராஜா, ம. தாஸ், இரா.மருதுபாண்டியன், பி.வி.ஆறுமுகம், க. கோவிந்தசாமி,

வழக்கறிஞர் ஜெ. காணிக்கைநாதன், எம்.கே. இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள், இ. மதன், இரா.பாலன், எம்.எல். ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், இரா.பொன்முடி, ந.குமார், எஸ்.யுவராஜ், ஏ.அன்வர், எம்.பாலாஜி, பிரியாணி பாலா, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.மொய்தீன், எஸ்.குமார், ஆர்.குருவம்மாள், சு.சுரேஷ், த.ரவி, எஸ்.மணிகண்டன், டி. கருணாகரன், கே.ரங்கராஜன், எம். டில்லிபாபு, வழக்கறிஞர் ஆர்.ராஜன், ந.ம. மகேஷ்குமார், மோ. ரவிக்குமார், எம்.வினோத்குமார், என்.அப்துல்மாலிக், கே.பவீத்ரன், எஸ்.பொன்னரசன், ந. மதினேஷ்குமார், கோ.வேலுமணி, வி.ராமச்சந்திரன், பி.ரவிசங்கர், பி.டி.பி. கதிரவன், க.வீ.பாரதிராஜா,

வழக்கறிஞர் சசிதரன், வழக்கறிஞர் தரணிதரன், வழக்கறிஞர் கோகுல், வழக்கறிஞர் ஆர்.ராஜ்குமார், கா. ஸ்ரீதர், பா.மணிகண்டன், டாக்டர் என்.தேவ குமார், பூ.ராஜேந்திரன், யு.அனிபா, ஆர்.மகேந்திரன், பி.பிரபாகரன், ஏ.ஆனந்தன், எஸ்.குமரன், வி.கே.ராஜ், கே.சிவதனுஷ், சாகுல்மீரான், ஏ.தமீமுன்அன்சாரி, எஸ்.மாரிமுத்து, ஏ.லோகேஷ், ஜெ.ஏ. சாலமன், எஸ்.சூரியபிரகாஷ், ந.தென்னரசு, அ.குமார் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்டத் துணைச் செயலாளர் எம்.வி.நாரசுமணி, வட்ட பொருளாளர் கே.ஆர்.கோபிநாத் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# சென்னையில் ஆறாவது நீர்த்தேக்கம்!

## நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு!

**“திருப்போரூர் வட்டத்தில் பழைய மாமல்லபுரம் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலைகளுக்கு இடைப்பட்டப் பகுதியில் 4,375 ஏக்கர் அரசு நிலப்பரப்பில் சுமார் 1.6 டி.எம்.சி.கொள்ளவில் ஆண்டிற்கு 2.25 டி.எம்.சி அளவிற்கு வெள்ள நீரினைச் சேமிக்கும் வகையில் சென்னையின் ஆறாவது நீர்த்தேக்கமாக புதிய நீர்த்தேக்கம் ஒன்று 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.”**

தலைமை பொதுக்குழு உறுப்பினர்

# சைதை சம்பத் நினைவேந்தல் - திருவுருவப் படம்: அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

## டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச்.15-

சைதை கிழக்குப் பகுதி தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா சம்பத் தந்தையும் முன்னாள் வட்டக் கழக செயலாளர் எம்.ஆர். சண்முகம் மகனும் முன்னாள் டி.யு.சி.எஸ். தலைவரும் தி.மு.க. தலைமை பொதுக்குழு உறுப்பினர் நினைவில் வாழும் சைதை சம்பத் அவர்களின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு விழா நாள் இன்று (15.03.2025 - சனிக்கிழமை) மாலையளவில் 6 மணி இடம் 16/48 சூடியம்மன் பேட்டை சைதாப்பேட்டை சென்னை 15-ல் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் தலைமையில் துணை மேயர் மு.மகேஷ் குமார், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், சைதை கிழக்குப் பகுதி செயலாளர் - 13வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், மேற்கு பகுதி கழகச் செயலாளர் - 10 வது மண்டல குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, 169 (அ) வட்ட பொறுப்பாளர் சைதை ஆ.வரதன், 169 வது வட்ட செயலாளர் எல். ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அன்னாரது திருவுருவப் படத்தை கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைக்கிறார்.

இதில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் க.பொன்முடி, எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., செஞ்சி கே. எஸ்.மஸ்தான் எம்..எல்.ஏ., முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜி. காமராஜ், ப.தாயகம்கவி, சி.வி.எம்.பி.எழிலரசன், ச.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம். வி. பிரபாகர்ராஜா,

மாவட்ட நிர்வாகிகள் த.விஸ்வநாதன், மு.மனோகரன் பா. வாசுகி பாண்டியன் எஸ். பாஸ்கரன் பகுதி கழக செயலாளர்கள் துரை கபிலன் சு.சேகர் கே.கண்ணன் மு. இராசா எஸ். வி. ரவிச்சந்திரன் வி. இ.மதியழகன் நொளம்பூர் வே. ராஜன் துரைவீரமணி ஜி. வெங்கடேசன் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன் வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் மின்னல் கந்தப்பன் மற்றும் மாநில மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.


**D.T.P. ஆப்ரேட்டர்கள் தேவை**

முரசொலி கணினிப்பிரிவில் இரவுப் பணிக்கு **“தமிழ் தட்டச்சு”, “பக்க வடிவமைப்பு”** மற்றும் **“பிழை திருத்தம்”** செய்வதற்கு திறமை மற்றும் முன்னனுபவம் வாய்ந்த ஆண்கள் தேவை. தகுந்த சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**தொடர்பு கொள்ள :–**
**பொதுமேலாளர்**
**“முரசொலி”**
**180,கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,**
**சென்னை – 600 034.**
**(தொலைபேசி : 044 – 28179191)**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜே.எஸ். இராசு
### மார்ச் 15 (2000)

கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

“பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்” எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டம்

### மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 21.03.2025 வெள்ளிக்கிழமை, காலை 10.30 மணியளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயத்தில்” எனது தலைமையில், துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : மாணவர் அணியின் செயல்பாடுகள் மேம்படுத்துதல் குறித்து

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 14.03.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தோழர் சாரங்கபாணி
### மார்ச் 15 (1965)

மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, “இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!” என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு “தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்” என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.

சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 1 லட்சம் வீடுகள் கட்ட ரூ.3500 கோடி!

## நிதிநிலை அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

6. இந்த நூற்றாண்டுப் பயணம் வெற்றிகரமானது என நாம் பெருமிதம் கொள்வது எதிர்காலத்தில் தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கி, மேலும் எழுச்சியுடன் செல்ல வேண்டிய தேவையினைக் குறிக்கிறது.

எதிர்வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொள்ள விருக்கும் பயணத்தின் திசைகாட்டியாக முத்தமிழறிஞர் கலைஞர், கால் நூற்றாண்டுக்கு முன்னர் நிகழ்த்திய சாதனைகள் இரண்டினை இம்மாமன்ற உறுப்பினர்கள் வாயிலாக தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு நினைவுபடுத்திட நான் விழைகிறேன்.

அகில உலகமே புத்தாயிரமாவது ஆண்டுத் தொடக்கவிழாக் கொண்டாட்டங்களில் திளைத்திருந்த போது, வான்புகழ் வள்ளுவருக்கு குமரிமுனையில் வானுயரச் சிலை எடுத்திட்ட முத்தமிழறிஞர்கலைஞர், அதே ஆண்டு சென்னையில் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்காவினையும் திறந்து வைத்ததன் மூலம் தமிழருக்கு ஒரு மகத்தான செய்தியினை உணர்த்திச் சென்றிருக்கிறார்.

**“ததும்பும் தமிழ்ப்பெருமிதம் ஒருபுறம், உலகை வெல்லும் உயர் தொழில்நுட்பம் மறுபுறம்”** என நமது எதிர்காலப் பயணம் அமைந்திட வேண்டும் எனக் குறிப்பால் உணர்த்தி, இன்று இம்மாமன்றத்தில் ஓவியமாய் உறைந்து நின்று நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

7. கடந்து வந்த நூற்றாண்டுப் பயணத்தின் காலடித் தடங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம், எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான பாதையினை நாம் திட்டமிட வேண்டும். நாம் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களுக்கு, அறிவியல் வழிநின்று, தொழிற்நுட்பத்தின் துணைகொண்டு பகுத்தறிந்து தீர்வுகள் காண வேண்டும். தமிழ்நாட்டில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களின் வளர்ச்சி முறைப்படுத்தப்பட வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வேளாண் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் புதிய உயரங்களை அடைய முன் முயற்சிகள் தேவைப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவுயுகத்தில் இளைஞர்களின் தனித்திறன் மேம்பாடு உரிய கவனம் பெற வேண்டும்.

பெருமளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடெங்கும் பரவலாக உருவாகிட வேண்டும். நவீன கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முனையும்போது, பசுமை ஆற்றல் வளங்களையும் முறையாகப் பயன்படுத்திட வேண்டும். வளர்ந்த நாடுகளுக்கு இணையான வளர்ச்சியை தமிழ்நாடு விரைந்து அடைந்திட விரிவான செயல்திட்டங்களை உடனடியாக நாம் உருவாக்கிட வேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது எழுந்துள்ளது.

**பேரறிஞர் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வை!**

8. எதிர்வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் முக்கிய நோக்கங்களை உள்வாங்கி, இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிட வழிகாட்டியாக அமைந்தவை பேரறிஞர் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வைதான். நிதியமைச்சராகவும் பொறுப்பு வகித்த பேரறிஞர் அண்ணா 1968-69 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்ட வாசகங்களை நினைவுகூர விழைகிறேன்.

**“இன்றைய சமுதாயத்தில், அரசு ஆற்ற வேண்டிய பங்கு பற்றிய நமது எண்ணங்களில் ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே, வரவு-செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும், செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலை மாறிவிட்டது.**

**குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே, தற்கால வரவு-செலவுத் திட்டம் அமைகிறது”.**

பேரறிஞர் அண்ணா வழிகாட்டிய திசையில் பயணித்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் நலன் காத்திடும் கருவியாகப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைக்க பெருமுயற்சி எடுத்திருக்கிறோம்.

**தமிழ் மொழி வளர்ச்சி**

9. **‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’** குமரி முனையில் ஆர்ப்பரிக்கும் அலைகளுக்கு நடுவே அமைதியின் திருவுருவாய் நிமிர்ந்து நின்று, தமிழ்ச் சமூகத்தை என்றென்றும் வழிநடத்தும் அய்யன் திருவள்ளுவரின் வானுயரச் சிலை எழுப்பப்பட்ட வெள்ளிவிழா ஆண்டினை தமிழ்கூறும் நல்லுலகம் அண்மையில் கொண்டாடி மகிழ்ந்தது.

**திருவள்ளுவர் சிலையை பேரறிவுச் சிலை என அறிவித்த முதல்வர்**

இத்தரணியில் கடலும் மலையும் உள்ளவரை நிலைத்து நிற்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்ட திருவள்ளுவரின் பெருஞ்சிலைக்கு **பேரறிவுச் சிலை** பெயரிட்டு அழைக்கலாம் என அறிவித்தவர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

10. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள் உரைத்திடும் உன்னத வாழ்வியல் நெறிகளை உலகெங்கும் பரப்புவது நமது தலையாய கடமையாகும். காலம்தோறும் அறிஞர்களின் பெருமுயற்சியாலும், பல கல்வி நிறுவனங்களின் முன்னெடுப்பினாலும், இது வரை திருக்குறள் 28 இந்திய மொழிகளிலும் 35 உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில், ஆசிய, ஆப்ரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பேசப்படும், 28 வெவ்வேறு மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்த்திட பன்னாட்டுப் பதிப்பாளர்கள் முன்வந்துள்ளனர். இதைத் தொடர்ந்து, 45 பல்வேறு உலக மொழிகளில் கூடுதலாக மொழிபெயர்க்கப்படும்போது, ஐக்கிய நாடுகள் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட 193 உலக நாடுகளின் அனைத்து அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையினை திருக்குறள் பெற்றிடும். வான்புகழ் வள்ளுவத்தை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் உயரிய நோக்கங்கொண்ட இந்த மொழிபெயர்ப்புத் திட்டத்தை, பிற கல்வி நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றிட, 133 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. இது மட்டுமன்றி, தலைசிறந்த தமிழ் இலக்கிய நூல்களை உலக மொழிகளில் கொண்டு செல்லும் மகத்தான முயற்சியின் முதற்படியாய், தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்நூறு தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திடும் மாபெரும் திட்டத்தினை, இருபதுக்கும் மேற்பட்ட புகழ்பெற்ற பன்னாட்டு மற்றும் இந்திய அளவிலான முன்னணி பதிப்பகங்களுடன் இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் கூட்டு வெளியீடாகச் செயல்படுத்தும்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டிற்கு நூறு நூல்கள் வீதம் ஐந்நூறு ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களைப் பதிப்பிக்கும் இம்முயற்சிக்கு முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. நாள்தோறும் மாறிக் கொண்டிருக்கும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர்தொழில்நுட்ப நூல்களை, துறை வல்லுநர்களின் வழிகாட்டுதலின்படி இயந்திர மொழியாக்கத் (Machine Translation) தொழில்நுட்பத்தின் துணையுடன் தமிழ் மொழியில் உடனுக்குடன் பதிப்பாக்கம் செய்திட 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். மேலும், பழந்தமிழ் ஓலைச்சுவடிகள், அரிய ஆவணங்கள் மற்றும் முக்கிய ஆளுமைகளின் கையெழுத்துப் பிரதிகளை மின் பதிப்பாக்கம் செய்திட, வரும் நிதியாண்டில் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று (14.3.2025) தமிழ்நாடு அரசின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தாக்கல் செய்தார். சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

13. அறிவைப் பரவலாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி மற்றும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தப்பட்டு வரும் புத்தகத் திருவிழாக்களை நாடே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

இதன் அடுத்தகட்ட நகர்வாக, தமிழர்கள் அதிகம் வசிக்கும் புதுதில்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, திருவனந்தபுரம் போன்ற பிற இந்தியப் பெருநகரங்கள் மட்டுமன்றி வெளிநாடுகளிலும், குறிப்பாக சிங்கப்பூர், கோலாலம்பூர் மற்றும் துபாய் ஆகிய நகரங்களிலும், தமிழ்ப் புத்தகக் கண்காட்சிகள் இந்த ஆண்டு முதல் நடத்தப்படும். இதற்கென 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் இளைய தலைமுறையினருக்கும் தமிழ் மரபை முறையாக அறிமுகம் செய்திடும் வகையில், அயலகத் தமிழர் நல வாரியம் மூலம் அவர்களுக்குத் தமிழ்மொழி மற்றும் நாட்டுப்புறக் கலைகளைப் பயிற்றுவிக்கும் 100 தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களைக் கொண்டு நேரடி வகுப்புகள் நடத்திட, 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. தமிழ்ச் செம்மொழியின் பெருமையினையும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினையும் உலகத் தமிழ் இளைஞர்களிடையே பரவிடச் செய்திடும் நோக்கத்தில், தமிழ்நாடு மட்டுமன்றி இதர இந்திய நகரங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் உலகத் தமிழ் மையங்களில் பயின்றிடும் மாணவர்களும் பங்கேற்கும் வகையில், கணினிவழித் தேர்வு முறையில் **உலகத்தமிழ் ஒலிம்பியாட்** போட்டி இனி ஆண்டுதோறும் நடத்தப்படும். உலக அளவிலான வெற்றியாளர்கள் மட்டுமன்றி, தேசிய மற்றும் மாநில அளவில் சிறப்பிடம் பெற்றிடும் மாணவர்களுக்குமான மொத்தப் பரிசுத் தொகையாக ஒரு கோடி ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கப்படும்.

16. இந்தியத் திருநாடு பன்மொழிகளின் சங்கமம் என்பதைக் கருத்தில் கொண்டு, உலகின் மிக மூத்த தனிச் செம்மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியின் தொன்மை மற்றும் தொடர்ச்சியினை இளைய தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில், **அகரம்-மொழிகளின் அருங்காட்சியகம்’** மதுரை உலகத் தமிழ்ச்சங்க வளாகத்தில் அமைக்கப்படும்.

திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த தமிழ் மொழிக்கும் இதர இந்திய மொழிகளுக்குமான மொழியியல் உறவு, தென்னிந்தியப் பழங்குடி மக்கள் பேசும் மொழிகள் குறித்த பதிவுகள், பாறை ஓவியங்கள் தொடங்கி, கல்வெட்டுகள், அச்சுக்கலை வழியே கணித்தமிழ் வரையிலான தமிழ்மொழியின் நீண்ட பயணம் குறித்த பல அரிய பதிவுகள் உயர் தொழில்நுட்ப வசதியுடன் இந்த மொழிகளின் அருங்காட்சியகத்தில் இடம் பெறும்.

**பண்பாடு**

17. தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையினை, இலக்கியம், வரலாறு மட்டுமன்றி தொல்லியல் அகழ்வாராய்ச்சி மூலம் வெளிக்கொணர்ந்த சான்றுகளையும் அறிவியல் முறைப்படி ஆய்வு செய்து அறிவுலகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறுவிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நமது அரசு எடுத்து வருகிறது.

18. தமிழ்நாட்டின் பல்வேறு இரும்புக்கால தொல்லியல் தளங்களில் சேகரிக்கப்பட்ட சான்றுகள் குறித்து, உலகப் புகழ்பெற்ற ஆய்வகங்களில் இருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், **தமிழ் நிலப்பரப்பில் 5,300 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பு உருக்கும் தொழில்நுட்பத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது”** எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் உலகிற்கு அறிவித்தார்கள்.

உலகின் தலைசிறந்த தொல்லியல் ஆய்வாளர்களும், தேசிய அளவிலான தொழில்நுட்ப வல்லுநர்களும் இந்த ஆய்வு முடிவுகளை வரவேற்றும், பாராட்டியும் உள்ளனர். இரும்பின் தொன்மை குறித்தும் பழந்தமிழரின் தொழில்நுட்பத் திறன் குறித்தும் வெளியான இந்த ஆராய்ச்சி முடிவுகளை உலகத் தமிழர்கள் பெருமகிழ்ச்சியோடு கொண்டாடி மகிழ்ந்தார்கள் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இவ்வேளையில், மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இம்மாமன்றத்தில் பெருமிதத்தோடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, வரலாற்றில் இடம்பெறவிருக்கும் வாசகத்தை நாம் நினைவு கூர்ந்து, இரும்பின் உறுதியோடு உரக்கச் சொல்வோம்

**-”இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும்.**

19. தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புகளை உலகறியச் செய்திடும் முயற்சியின் தொடர்ச்சியாக, எதிர்வரும் 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் சிவகங்கை மாவட்டம்-கீழடி, தூத்துக்குடி மாவட்டம், பட்டணமருதூர், தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர், நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம், கடலூர் மாவட்டம் - மணிக்கொல்லை, - கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆதிச்சனூர், கோயம்புத்தூர் மாவட்டம் - வெள்ளளூர் மற்றும் சேலம் மாவட்டம் - தெலுங்கனூர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படும்.

பழந்தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடும் பயணம் அண்டை மாநிலங்களில் உள்ள பாலூர் (ஒடிசா), வெங்கி (ஆந்திரா), மஸ்கி(கர்நாடகா) ஆகிய பகுதிகளுக்கும் விரிவடைந்திருக்கிறது.

20. அகழ்வாராய்ச்சியில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களில், தொல் மரபணுவியல் (Ancient DNA analysis), உலோகவியல் பகுப்பாய்வு (Metallurgical analysis), நுண் தாவரவியல் (Micro Botany), மகரந்தப் பகுப்பாய்வு (Pollen analysis), தூண்டொளி வெப்பக் காலக் கணிப்பு (Optically Stimulated Luminescence Dating), மட்பாண்டவியல் (Ceramic Technology) உள்ளிட்ட உயர்தொழில்நுட்ப ஆய்வுகள், உலகப் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும். வரும் நிதியாண்டில் தொல்லியல் அகழ்வாராய்ச்சி மற்றும் அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ள 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

21. மேலும், தென்கிழக்கு ஆசியா, மத்திய தரைக்கடல் பகுதி, அரேபியத் தீபகற்பம் மற்றும் ரோமப் பேரரசுப் பகுதிகளுடன் பழந்தமிழர் மேற்கொண்டிருந்த கடல்வழி வணிகச் சிறப்பினை வெளிக்கொணரும் வகையில், பல்வேறு ஆழ்கடல் அகழாய்வுகளை தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, இந்த ஆண்டு புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களின் ஆலோசனையுடனும், முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் துணையோடும், காவிரிப்பூம்பட்டினம் முதல் நாகப்பட்டினம் வரை விரிவான ஆழ்கடல் அகழாய்வு மேற்கொள்ளப்படும்.

22. தமிழ்நாடெங்கும் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளில் வெளிக்கொணரப்பட்ட தொல்லியல் பொருட்களை, உயர்தொழில்நுட்ப வசதிகள் துணை கொண்டு அழகுற காட்சிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகங்கள் அமைப்பதன் மூலம், தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை உலகிற்கு உரியமுறையில் பறைசாற்றிட முடியும் என இந்த அரசு கருதுகிறது.

அந்த வகையில், கொடுமணல் அகழாய்வுகளை முன்னிலைப்படுத்தி, ஈரோடு மாவட்டத்தில் **நொய்யல் அருங்காட்சியகம்** 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சங்ககாலப் பாண்டியரின் கடல் வழி வணிகச் சிறப்பை விளக்கிடும் வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் **நாவாய் அருங்காட்சியகம்** 21 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் உருவாக்கப்படும்.

23. சிந்துவெளி பண்பாட்டுக் கண்டுபிடிப்பின் எழும்பூர் நூற்றாண்டு நிறைவையொட்டி, சென்னை அருங்காட்சியகத்தில் *சிந்துவெளி பண்பாட்டு அரங்கம்’ உருவாக்கப்படும். மேலும், தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் பிற மாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழரின் தொன்மை மற்றும் தொடர்ச்சியின் சிறப்புகளை அறிமுகப்படுத்தும் விதமாக, மாமல்லபுரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தமிழர் பண்பாட்டு அருங்காட்சியகங்கள் உருவாக்கப்படும்.

24. காலத்தை வென்ற கைவினைஞர்களின் கைவண்ணத்தில் ஐம்பொன்னால் உருவான இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட செப்புத் திருமேனிகள் எழும்பூர் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. சிற்ப அமைதி, உடல் நெகிழ் தோற்றத் தன்மை, எழில்மிகு முத்திரைகள் கொண்ட சிற்பத் திருமேனிகளை வெளிநாட்டவரும் கண்டு வியக்கும் வகையில் மரபுசார் கட்டடக்கலை வடிவமைப்புடன் கூடிய காட்சி அரங்கம் ஒன்று 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்படும்.

**ஊரக வளர்ச்சி**

25. ஓலைக்குடிசைகளில் வசிக்கும் ஏழைக் குடும்பங்கள் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டிருந்த கருணையினையும், குடிசையில்லா தமிழ்நாடு அமைந்திட வேண்டும் என்ற அவரது பெருங்கனவையும் நினைவு கூரும் வகையில், கடந்த ஆண்டு **‘கலைஞரின் கனவு இல்லம்’** எனும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் நோக்கத்துடன், சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டும் பணிகள், அனைத்து மாவட்டங்களிலும் விரைவாக நடைபெற்று வருகின்றன. அதைத் தொடர்ந்து, 2025-26 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் தொடங்கப்படும்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## சட்டப் பேரவையில் 2மணி 40 நிமிடங்கள் உரையாற்றினார் நிதி அமைச்சர்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நேற்று காலை 9.30 மணியளவில் கூடியது. பேரவை கூடியதும் முதல் நிகழ்வாக, பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள்,குறளும் - அதன் பொருளும் படித்தார்.

அதனை அடுத்து,“நிதி அமைச்சர் அவர்கள்,தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை பேரவைக்கு அளிப்பார்” என அறிவித்தார்.

பேரவைத் தலைவரின் அறிவிப்பினைத் தொடர்ந்து, காலை சரியாக 9.30 மணியளவில்,பேரவையில் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்து உரையாற்றத் தொடங்கினார் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு!

காலை 9.30 மணிக்கு தமது உரையைத் தொடங்கிய நிதி அமைச்சர்,பகல் 12.10 மணியளவில் உரையை நிறைவு செய்தார்.

இடைவெளி சிறிதுமின்றி, தங்கு தடை ஏதுமிலாது, கழக அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் அடுக்கடுக்காக வெளியிட்டு,2 மணி 40 நிமிடங்கள் அழகுற உரையாற்றினார்.

நிதிஅமைச்சரின்உரையைபேரவைத்தலைவர்அவர்கள்பாராட்டிப்புகழ்ந்துரைத்தார். உறுப்பினர்கள் அனைவரும் மேசையைத் தட்டி பலத்த ஒலி எழுப்பி வரவேற்று மகிழ்ந்தனர்.

# ரூ.100 கோடியில் பிரமாண்டமான முறையில் ‘சென்னை அறிவியல் மையம்’ உருவாக்கப்படும்!